Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 277 | உள்ளூர் - 05.10.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 277 | வெளியூர் - 06.10.2026 | செவ்வாய்க்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

குலதெய்வம் சபிக்குமா?

ITBP வேலைவாய்ப்பு 37 இடங்கள்!

குரூப் 4 அறிவிப்பு அக் 6!

'வெற்றிப் பயணம்' வழிகாட்டுதல்கள்...?

## ஆசிய விளையாட்டுப் போட்டி; இந்திய குழுவிற்கு பிரதமர் வாழ்த்து...!




புதுடெல்லி, அக். 05–

2026 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா மொத்தம் 85 பதக்கங்களை (21 தங்கப் பதக்கங்கள், 27 வெள்ளிப் பதக்கங்கள், 37 வெண்கலப் பதக்கங்கள்) வென்று பதக்க பட்டியலில் 4–ஆம் இடத்தைப் பிடித்து அசத்தி உள்ளது. இந்த சூழலில் இந்த போட்டியில் பங்கேற்று பதங்கங்களை வென்றுள்ள இந்திய வீரர்களுக்கு பாத்தாரு தெரிவித்து தண்டு அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி பதிவிட்டு உள்ளார். பிரதமர் வெளியிட்டிருக்கும் வாழ்த்து பதிவில் " 2026–ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில், இதில் உறுதியுடனும், ஆர்வத்துடனும், சிறப்பான விளையாட்டு மனப்பான்மையுடனும் நம் நாட்டைப் பிரதிநிதித்துவ ப்படுத்திய இந்தியக் குழுவின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் சிறப்பான செயல்பாடுகள் மூலம் நாட்டிற்குப் பெருமகிழ்ச்சியைத் தேடித்தந்த பதக்கம் வென்றவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள். இந்த போட்டிகளில் கிடைத்த வெற்றிகள் வருங்காலத்தில் இன்னும் பல சாதனைகளைப் படைக்க ஊக்கமளிக்கட்டும்; அத்துடன், அடித்தள நிலையிலும் விளையாட்டை வலுப்படுத்த இவை பங்களிக்கட்டும்'' என பாராட்டு தெரிவித்துள்ளார்.

## அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி-யும்... இந்தியாவின் அடுத்த கட்ட வளர்ச்சிப் பயணமும்..!



புதுடெல்லி, அக். 05–

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க, சிறியதோ பெரியதோ ஒவ்வொரு தொழிலும் செழித்து வளரக் கூடிய பொருளாதாரச் சூழல் அவசியம். 2017–ஆம் ஆண்டில் அறிமுகமான ஜிஎஸ்டி (சரக்கு மற்றும் சேவை வரி) நாடு முழுவதும் ஒருங்கிணைந்த மறைமுக வரி அமைப்பை உருவாக்கியது. நடை முறை அனுபவம், வரி செலுத்துவோரின் அனுபவங்கள், மாநிலங்களின் அனுப வங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அதன் அடுத்த பரிணாமமாக, அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி கொண்டு வரப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையில் உருவான இதன் இரு நோக்கங்கள் – வரிவிகிதங்களை எளிமைப்படுத்துதலும், வரி இணக்கத்தைச் சுலபமாக்குதலும் ஆகும். வரி விகித மாற்றங்கள் 2025 செப்டம்பர் 22 முதல் அமலுக்கு வந்தன. அடுத்தகட்ட நடைமுறை சீர்திருத்தங்கள் ஜிஎஸ்டி கவுன்சலின் முன் விரைவில் வரவுள்ளன. குடும்பங்களுக்கு நிவாரணம், தொழில்களுக்கு உறுதி, வரி செலுத்துவோருக்கு சிக்கலற்ற நடைமுறை என்பதே இவற்றின் இலக்கு. இந்தப் பயணத்தில் மாநிலங்கள் தங்கள் முன்னுரிமைகள், அனுபவங்களுடன் பங்கேற்று, முடிவெடுப்பதிலும் செயல்படுத்துதலிலும் சிறப்பாகப் பங்காற்றுகின்றன.

சீர்திருத்தத்தின் பலனை புள்ளிவிவரங்கள் காண்பிக்கின்றன. 2026 ஏப்ரல்செப்டம்பர் காலகட்டத்தில் மொத்த சரக்கு, சேவை வரி வருவாய் ரூ.12.46 லட்சம் கோடியாகும். இது முந்தைய ஆண்டைவிட 11.6 சதவீதம் அதிகம். ஜூன் முதல் செப்டம்பர் வரை ஒவ்வொரு மாதமும் இரட்டை இலக்க வளர்ச்சி பதிவாகி, அந்த நான்கு மாத வருவாய் கிட்டத்தட்ட 15 சதவீதம் உயர்ந்தது. திருப்பிச் செலுத்துதல்களைக் கழித்தபின் நிகர வருவாய் 10.4 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டது.

இந்த வளர்ச்சி 11 துறைப் பிரிவுகளிலும் முக்கிய மாநிலங்களிலும் பரவியுள்ளது. நுகர்வோருக்கான பொருள்களின் விற்பனை 26.7 சதவீதம் உயர்ந்துள்ளது. வரிச்சலுகையானது, பொருள்களின் விலையில் பிரதிபலிக்கும்போது குடும்பங்களின் வாங்கும் திறனும் சேமிப்புத் திறனும் அதிகரிக்கின்றன. அதுவே சில்லறை விற்பனையாளர் முதல் உற்பத்தியாளர் வரை பொருளாதாரச் சங்கிலியில் தேவையையும் வளர்ச்சியையும் உருவாக்குகிறது.

சிறு, நடுத்தர நிறுவனங்கள் புதிய வாடிக்கையாளர்களை அடையும் வாய்ப்பைப் பெற்றுள்ளன. இரண்டாம், மூன்றாம் நிலை நகரங்களில் தொழில் வளரும்போது வேலைவாய்ப்பும், வணிக கட்டமைப்பும் விரிவடைகின்றன.

ஆகஸ்ட் இறுதி நிலவரப்படி சரக்கு, சேவை வரிக்கான பதிவுகள் மொத்தம் சுமார் 1.71 கோடியாக இருந்தது. இது ஓராண்டில் கிட்டத்தட்ட 15% அதிகரித்துள்ளது. 2026 ஏப்ரல்ஜூலை காலகட்டத்தில் உரிய தேதிக்குள் தாக்கல் செய்யப்பட்ட மாதாந்திர வரிக் கணக்குகளும் 12.6 சதவீதம் உயர்ந்தன.

வரி திருப்பிச் செலுத்துதலும் முக்கியமானது. ஏப்ரல் செப்டம்பர் காலத்தில் சுமார் ரூ.1.80 லட்சம் கோடி திருப்பிச் செலுத்தப்பட்டது. தகுதியான தொகை கிடைக்கும் என்ற நிச்சயத்தன்மை அதிகரித்தால், நிறுவனங்கள் கொள்முதலையும் உற்பத்தியையும் நம்பிக்கையுடன் திட்டமிட முடியும். திருப்பிச் செலுத்தும் நடைமுறையும் வரி நிர்வாகத்தின் தரத்தை அளவிடும் முக்கியக் குறியீடாகும்.

மாநிலங்களின் வருவாயும் வலுப்பெற்றுள்ளது. மாநில சரக்கு, சேவை வரியும் ஒருங்கிணைந்த சரக்கு, சேவை வரியும் சேர்த்து மாநிலங்களின் வருவாய் இந்த ஆண்டு ஏப்ரல்செப்டம்பர் காலகட்டத்தில் சுமார் 16 சதவீதம் உயர்ந்தது. இதனால் உள்கட்டமைப்பிலும், பொதுச் சேவைகளிலும் முதலீடு அதிகரிக்கிறது.

வரும் அக்டோபர் 7–இல் ஜிஎஸ்டி கவுன்சிலின் முன் வைக்கப்படும் முன்மொழிவுகள், மாநிலங்களுடன் தொடர்ச்சியாகப் பணியாற்றியதன் மூலம் உருவாக்கப்பட்டுள்ளன. அவை, இணக்கத்துக்கான நேரத்தையும் செலவையும் குறைக்கும் நோக்கத்தில், பதிவு, வருமான அறிக்கைகள், பணத்தைத் திரும்பப் பெறுதல், தகராறுகள், உள்ளீட்டு வரி வரவின் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியதாக உள்ளன. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி அமைப்பின் முதிர்ச்சி, அடுத்தகட்ட சீர்திருத்தங்களுக்கு வலுவான அடித்தளமாகியுள்ளது. தெளிவு, உறுதி, வரி செலுத்துவோருக்கு மரியாதை என்ற அணுகுமுறை நேரடி வரிகளிலும் தொடர்கிறது. நம்பகமான வரி அமைப்பானது, தொழில்கள் நீண்டகால முதலீடுகளைத் திட்டமிடும் நம்பிக்கையை அளிக்கிறது. அந்த நம்பிக்கையே தொழில், நுகர்வு, வேலைவாய்ப்பு, அரசு வருவாய் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கிய பொருளாதாரப் பயணத்தை மேலும் வலுப்படுத்தும்.

## தொடரும் டெல்லியில் போராட்டம்!



புதுடெல்லி, அக். 05–

தேர்தல் ஆணையத்திற்கு எதிராக டெல்லியில் நடைபெற்ற போராட்டத்தில், அனைத்திந்திய மாணவர் சங்கத்தின் தேசியத் தலைவி நேகா போரா உள்ளிட்டோர் காவல்துறையினரால் தடுத்து வைக்கப்பட்டனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்தில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் குற்றம்சாட்டி, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் எனப் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர். அக்டோபர் 4 அன்று மூன்றாவது நாளாகப் போராட்டம் தொடர்ந்த நிலையில், ஜந்தர் மந்தர் நோக்கிச் செல்ல முயன்ற பலர் தடுத்து வைக்கப்பட்டனர். நேகா போராவைத் தனியார் வாகனத்தில் அழைத்துச் சென்றதாக மாணவர் சங்கம் குற்றம்சாட்டியது. இந்தக் குற்றச்சாட்டைக் காவல்துறை மறுத்துள்ளது.

## ஆசிய விளையாட்டில் பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகளுக்கு விருந்து!



சென்னை, அக். 05–

ஆசிய விளையாட்டில் பதக்கம் வென்ற தமிழக வீரர், வீராங்கனைகளுக்கு முதல்வர் விஜய் விருந்து அளிக்கவுள்ளதாக அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் உள்ள அய்ச்சி மாகாணத்தின் நகோயா நகரில் கடந்த செப்டம்பர் 19–ஆம் தேதியில் 20 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் தொடங்கின. 16 நாள்கள் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் 46 நாடுகளில் இருந்து சுமார் 11,000 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

43 விளையாட்டுகளில் 469 பிரிவுகளில் பந்தயங்களும் நடத்தப்பட்டன. அதில் வென்றவர்களுக்கு 483 தங்கம், 483 வெள்ளி, 654 வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. போட்டியின் வரலாற்றில் இதுவரை இல்லாத எண்ணிக்கையாக, இந்த முறை சுமார் 350 சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. போட்டியில் இந்தியா 21 தங்கம், 27 வெள்ளி, 37 வெண்கலம் என, மொத்தமாக 85 பதக்கங்களுடன் 4–ஆம் இடம்பிடித்து நிறைவு செய்தது.

மேலும், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற வீரர், வீராங்கனைகளுக்கு அரசு சார்பில் பரிசுத் தொகையும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழக வீரர், வீராங்கனைகளை முதல்வர் விஜய் விரைவில் சந்திக்கவிருப்பதாகவும், அவர்களுக்கு விருந்தளிக்க ஏற்பாடு செய்யப்படவிருப்பதாகவும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

## தீபாவளிக்கு முன் வட்டி உயர்வு? கடன் வாங்கியோருக்கு இ.எம்.ஐ. அதிர்ச்சி?



புதுடெல்லி, அக்.05–

ரிசர்வ் வங்கியின் நாணயக் கொள்கைக் கூட்டம் அக்டோபர் 5 ஆம் தேதி தொடங்கியுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி, கடன் வாங்குவோர் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. பணவீக்கம் மற்றும் சர்வதேச பொருளாதாரச் சூழலைக் கருத்தில் கொண்டு, ரெப்போ விகிதம் 5.25 சதவீதத்திலிருந்து 5.50 சதவீதமாக உயர்த்தப்படலாம் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இது எதிர்பார்ப்பு மட்டுமே; அதிகாரப்பூர்வ முடிவு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

கச்சா எண்ணெய் விலை உயர்வு, உணவுப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் விநியோகச் சிக்கல்கள் பணவீக்க அழுத்தத்தை அதிகரிப்பதாகக் கூறப்படுகிறது. அமெரிக்க வட்டி விகித மாற்றங்கள், வெளிநாட்டு முதலீடுகளின் நகர்வு மற்றும் ரூபாய் மதிப்பில் ஏற்படும் அழுத்தமும் ரிசர்வ் வங்கியின் முடிவில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய காரணிகளாகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன. ரெப்போ விகிதம் உயர்த்தப்பட்டு, அதற்கேற்ப வங்கிகள் கடன் வட்டியை மாற்றினால், வீடு மற்றும் வாகனக் கடன்களுக்கான செலவு அதிகரிக்கலாம். குறிப்பாக, மாறும் வட்டி விகிதத்தில் கடன் பெற்றவர்களுக்கு மாதத் தவணை உயரலாம் அல்லது திருப்பிச் செலுத்தும் காலம் நீளலாம். நிலையான வட்டிக் கடன்களின் தாக்கம், ஒப்பந்த நிபந்தனைகளைப் பொறுத்து மாறுபடும். தீபாவளியை முன்னிட்டு வீடு, கார் அல்லது இருசக்கர வாகனம் வாங்கத் திட்டமிடுவோர், கடனுக்கான மொத்தச் செலவை மதிப்பிடுவது அவசியம். மாதத் தவணை மட்டுமின்றி, வட்டி, செயலாக்கக் கட்டணம் மற்றும் பிற நிபந்தனைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஏற்கெனவே கடன் பெற்றவர்கள், வட்டி மாற்றம் குறித்த வங்கியின் அறிவிப்பைக் கவனிக்க வேண்டும்.

வட்டி உயர்வு உறுதியானதாகக் கருத முடியாது. ரிசர்வ் வங்கியின் அதிகாரப்பூர்வ அறிவிப்பும், அதைத் தொடர்ந்து வங்கிகள் மேற்கொள்ளும் மாற்றங்களுமே கடன் வாங்குவோருக்கான உண்மையான தாக்கத்தைத் தீர்மானிக்கும். எனவே, எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் அவசர முடிவெடுக்காமல், உறுதியான விவரங்களை அறிந்து செயல்படுவது பொருத்தமானது. கடன் தவணை எப்போது மாற்றப்படும், புதிய வட்டி எவ்வாறு கணக்கிடப்படும் என்பதையும் வங்கியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். குடும்பத்தின் மாதாந்திர வருமானம் மற்றும் அத்தியாவசியச் செலவுகளுடன் புதிய கடன் சுமையை ஒப்பிட்டு முடிவு செய்வது உதவும்.




தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான சிங்கப்பூர் நாட்டின் தூதர் சைமன் வோங் (Mr. Simon Wong) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, சென்னையிலுள்ள சிங்கப்பூர் நாட்டுத் தூதரகத்தின் துணைத் தூதர் வில்லியம் சிக் (Mr. William Chik) மற்றும் தூதரக உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## இடைத்தேர்தல்: தாராபுரத்தில் 340 பள்ளிகளுக்கு 2 நாள் விடுமுறை!



தாராபுரம், அக். 05–

தாராபுரம், மதுராந்தகம் தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெறுவதையொட்டி, தொகுதிகளுக்குட்பட்ட பள்ளிகளுக்கு இரு நாள்கள் விடுமுறை அளிக்கப்படுகிறது.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தொகுதி மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஆகிய இரு தொகுதிகளிலும் இடைத்தேர்த லுக்கான வாக்குப்பதிவு செவ்வாய்க்கி ழமையில் நடைபெறவுள்ளது. இவ்விரு தொகுதிகளிலும் தவெக, திமுக, அதிமுக, இடதுசாரிகள், நாதக என ஐந்து முனைப் போட்டி நிலவுகிறது. இந்த நிலையில், இடைத்தேர்தல் நடைபெறும் இவ்விரு தொகுதிகளுக்கும் உட்பட்ட அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு இன்றும் நாளையும் விடுமுறை அளிக்கப்படுகிறது.

தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதியில் உள்ள 165 பள்ளிகள், இடைத்தேர்தலுக்காக வாக்குச்சாவடி மையங்களாகச் செயல்படவுள்ளன. அதுமட்டுமின்றி, ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் வாக்குச்சாவடி அலுவலர் பணியில் ஈடுபடவிருப்பதால், தாராபுரத்தில் 266 பள்ளிகளும், திருப்பூரில் 61 பள்ளிகளும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த 21 பள்ளிகளிலும் வேலை நாள்களாக இயங்காத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், மொத்தம் 348 பள்ளிகளுக்கு இன்றும் நாளையும் விடுமுறை அளிக்கப்படுகிறது. இதேபோல், மதுராந்தகம் தொகுதியிலும் தொகுதி க்குள்பட்ட அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் இன்றும் நாளையும் விடுமுறை அளிக்கப்படுகிறது.

இருப்பினும், இவ்விரு தொகுதிகளிலும் செயல்பட்டு வரும் தனியார் பள்ளிகளில் வாக்குப்பதிவு நாளான செவ்வாய்க்கி ழமையில் மட்டும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மாநில பாடத்திட்டத்தில் பயிலும் மா ணவர்களுக்கு, காலாண்டு விடுமுறை முடிந்து (அக். 5) பள்ளிகள் திறக்கப்ப டவுள்ள நிலையில், தாராபுரம் மற்றும் மதுராந்தகம் தொகுதிகளில் மட்டும் அக். 7 ஆம் தேதியில் பள்ளிகள் திறக்கப்படுகின்றன.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 05.10.2026
விசுவாவசு தமிழ் வருடம்
புரட்டாசி மாதம் 18-ம் தேதி

## நான்காவது இடம் போதுமா? இந்திய விளையாட்டுக்கு ஒரு விழிப்புணர்வு!



ஆசிய விளையாட்டில் இந்தியா மீண்டும் நான்காவது இடத்தைப் பிடித்திருக்கிறது. 21 தங்கம் உட்பட 85 பதக்கங்கள் என்பது பாராட்டுக்குரிய சாதனை. ஆனால், கடந்த முறை பெற்ற 107 பதக்கங்களுடன் ஒப்பிடும்போது, இந்த முடிவு நம்மைச் சிந்திக்கவும் வைக்கிறது. தரவரிசையைத் தக்கவைத்திருந்தாலும், பதக்க எண்ணிக்கையில் ஏற்பட்ட சரிவை அலட்சியப்படுத்த முடியாது.

வில்வித்தையில் கிடைத்த முன்னேற்றம் நம்பிக்கையளிக்கிறது. வலிமையான போட்டியாளர்களை எதிர்கொண்டு இந்திய வீரர், வீராங்கனைகள் சாதித்திருப்பது, முறையான பயிற்சியும் தொடர்ச்சியான ஆதரவும் எத்தகைய பலனைத் தரும் என்பதைக் காட்டுகிறது. தமிழகத்தின் வித்யா உள்ளிட்ட வீராங்கனைகளின் செயல்பாடுகளும் இந்திய விளையாட்டின் திறனை வெளிப்படுத்துகின்றன. இந்த வெற்றிகளுக்குப் பின்னால் இருக்கும் உழைப்பை நாடு மதிக்க வேண்டும்.

அதே நேரத்தில், துப்பாக்கி சுடுதல், தடகளம் உள்ளிட்ட பிரிவுகளில் ஏற்பட்ட பின்னடைவை ஆராய வேண்டியது அவசியம். டென்னிசில் பதக்கம் கிடைக்காததும், பாட்மின்டன் போன்ற விளையாட்டுகளில் எதிர்பார்த்த வெற்றி அமையாததும் கவலை அளிக்கின்றன. தோல்விகளுக்கான விளக்கத்தை வீரர்களிடம் மட்டும் கேட்பது நியாயமாகாது. பயிற்சித் திட்டம், போட்டித் தயாரிப்பு, வீரர் தேர்வு, மருத்துவ ஆதரவு ஆகியவற்றையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

முன்னணி வீரர்கள் காயத்தால் விலகியிருப்பது முக்கியமான பாடம். காயம் ஏற்பட்ட பிறகு சிகிச்சை அளிப்பதுடன், காயங்களைத் தடுக்கும் அறிவியல் அணுகுமுறைக்கும் முக்கியத்துவம் தேவை. உடற்தகுதி கண்காணிப்பு, ஓய்வு, மீட்புப் பயிற்சி ஆகியவை பதக்க இலக்குடன் இணைந்திருக்க வேண்டும். தங்குமிடம் மற்றும் போக்குவரத்து வசதிகளில் ஏற்பட்டதாகக் கூறப்படும் சிக்கல்களையும் உரிய அமைப்புகள் மதிப்பிட வேண்டும். சர்வதேசப் போட்டியில் வீரர்கள் தங்கள் முழுக் கவனத்தையும் விளையாட்டில் செலுத்துவதற்கான சூழலை உருவாக்குவது நிர்வாகத்தின் பொறுப்பு.

2028 லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்ஸை நோக்கிய தயாரிப்புக்கு இந்த முடிவுகள் வழிகாட்ட வேண்டும். ஆசிய விளையாட்டு வெற்றிகள் தாமாகவே ஒலிம்பிக் பதக்கங்களாக மாறிவிடாது. உலகத்தரப் போட்டியாளர்களை எதிர்கொள்ளத் தனித்த பயிற்சித் திட்டமிடலும் தேவை. வென்றவர்களைப் பாராட்டுவோம். பின்னடைந்தவர்களுக்கு ஆதரவளிப்போம். அதே நேரத்தில், விளையாட்டு நிர்வாகத்திடம் பொறுப்பையும் கேட்போம். நான்காவது இடத்தைத் தக்கவைத்ததில் மகிழ்ச்சி இருக்கலாம்; அடுத்த உயரத்தை அடைவதற்கான செயல்திட்டமும் இருக்க வேண்டும்.

**ஆசிரியர்**
**மதுரை மணி**

## பழனியில் மழை வேண்டி வருண ஜபம் பூஜை!



பழனி, அக். 05–
பழனியில் தமிழ்நாடு பிராமண சமாஜம் சார்பில் மழை வேண்டி வருண ஜபம் சிறப்பு பூஜை மற்றும் கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. பழனி வில் விநாயகர் கோவிலில் தமிழ்நாடு பிராமண சமாஜம் சார்பில் தமிழக முழுவதும் மழை பெய்து விவசாயம் செழிக்க வேண்டி வருண ஜபம் சிறப்பு பூஜை மற்றும் கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. முன்னதாக புனித கலசங்கள் வைக்கப்பட்டு சிறப்பு யாகம் நடைபெற்றது. அதன் பின்பு நீர் நிறைந்த தொட்டியில் நின்றபடி வேத விற்பனர்கள், வேத மந்திரங்களை முழங்கினர். இதை முன்னதாக தமிழ்நாடு பிராமண சமாஜம் தலைவர் என் ஹரிஹர முத்து ஐயர் தலைமை வைத்து தொடங்கி வைத்தார். இதில் நிர்வாகிகள் ரமேஷ் குமார், வழக்கறிஞர் அனிருத் கர்கா, சந்தரேச குருக்கள், ரயில் உபயோகிப்பாளர் சங்கம் எஸ்வி நாகேஸ்வரன், சீனிவாசன், சுந்தரம் பிள்ளை உள்பட ஏராளமான பங்கேற்றனர்.

## இந்து சமத்துவ கட்சி சார்பில் கொடிகாத்த குமரன் பிறந்த நாள் விழா!



திருப்பூர், அக். 05–
இந்து சமத்துவ கட்சி சார்பில் குன்னத்தூரில் கொடிகாத்த திருப்பூர் குமரன் பிறந்தநாள் விழா நிறுவனத் தலைவர் உழைப்பாளி பூபாலு தலைமையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கியும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டும் விழா ஏற்பாடு வடக்கு மாவட்ட தலைவர் சோ. கார்த்தி.மாநில செயலாளர் மா.சிவா அன்னதானம் வழங்கினார் இயக்க தலைவர்.ப. குமரேசன் மரக்கன்று வழங்கினார். கோவை மாவட்ட தலைவர் மா. ராதாகிருஷ்ணன் குன்னத்தூர் நகர மற்றும் ஊத்துக்குளி ஒன்றிய பொறுப்பாளர்கள் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி சிறப்பித்தனர்.

# அமிர்தசரஸில் காவல் உதவி ஆய்வாளர் மீது துப்பாக்கிச்சூடு!

அமிர்தசரஸ், அக். 05–
பஞ்சாப் மாநிலம், அமிர்தசரஸில் ஞாயிற்றுக்கிழமை மாலை இருசக்கர வாகனத்தில் வந்த 3 மர்ம நபர்கள், காவல் உதவி ஆய்வாளர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக போலீஸார் திங்கள்கிழமை தெரிவித்தனர். இதில் அமிர்தசரஸில் உள்ள ரயில்வே காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணியாற்றும் சுக்செயின் சிங்கின் இடது கையில் குண்டு காயம் ஏற்பட்டது.

பணியை முடித்துவிட்டு வீடு திரும்பும் வழியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அமிர்தசரசில் உள்ள ஜக்தேவ் குர்த் கிராமம் அருகில் அவர் சென்றபோது, இருசக்கர வாகனத்தில் வந்த 3 பேர் அவரை நோக்கித் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பியோடினர். இருசக்கர வாகனத்தில் சென்ற சுக்செயின் சிங்,



சிவில் மருத்துவமனைக்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட்டார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு அமிர்தசரசில் உள்ள மருத்துவமனையில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய சுக்செயின் சிங், தான் வீடு திரும்பும் வழியில் பின்னால் வந்த மூவர் தன்னை நோக்கிச் சுட்டதாகத் தெரிவித்தார். தகவல் அறிந்ததும் போலீஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

இந்தச் சம்பவம் குறித்து பல கோணங்களில் விசாரணை நடைபெற்று வருவதாகவும், வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் காவல் அதிகாரி தெரிவித்தார். கடந்த மாதம் காவல் உதவி ஆய்வாளர் ஹர்ஜித் சிங் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, இந்தச் சமீபத்திய துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்துள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம், அமிர்தசரசில் உள்ள பக்தான்வாலா தானியச் சந்தையில் இருசக்கர வாகனத்தில் வந்த இருவரால் காவல் உதவி ஆய்வாளர் ஹர்ஜித் சிங் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனிடையே மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கு நிலை குறித்து எதிர்க்கட்சிகள் ஆம் ஆத்மி அரசை கடுமையாக விமர்சித்துள்ளன.

# ஆனைமலையாறு - நல்லாறு பாசன திட்டம்: தமிழக அமைச்சர்கள் குழுவின் கேரள பயணம் ஒத்திவைப்பு!

சென்னை, அக். 05–
ஆனைமலையாறு – நல்லாறு திட்டம் தொடர்பாக விவாதிப்பதற்காக கேரளா செல்ல இருந்த தமிழக அமைச்சர்கள் குழுவின் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கேரளாவில் உற்பத்தியாகி வீணாக அரபிக்கடலுக்கு செல்லும் ஆனைமலையாறு நீரை, நல்லாறு வழியாக திருப்பி தமிழ்நாட்டில் உள்ள திருமூர்த்தி அணைக்குக்கொண்டு வருவதே ஆனைமலையாறு – நல்லாறு திட்டமாகும். கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் பாசன வசதிக்காக ஆனைமலையாறு – நல்லாறு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பது தமிழக விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையாக உள்ளது.

இந்த திட்டத்தை செயல்படுத்துவது குறித்து கேரள அரசுடன் விவாதிப்பதற்காக தமிழக அமைச்சர்கள் குழு இன்று கேரளாவுக்கு செல்ல திட்டமிட்டிருந்தது.

இந்த குழுவில் தமிழக நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த், வருவாய்த்துறை





அமைச்சர் செங்கோட்டையன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருண்ராஜ், சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ் குமார் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்த குழுவினர் கேரள முதல் மந்திரி விடி சதீசன் மற்றும் அம்மாநில நீர்ப்பாசனத்துறை மந்திரியை சந்திக்க இருந்தனர்.

இந்நிலையில், ஆனைமலையாறு – நல்லாறு பாசன திட்டம் தொடர்பாக ஆலோசனை நடத்த தமிழக அமைச்சர்கள் குழுவின் மேற்கொள்ள இருந்த கேரள பயணம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதால் அமைச்சர்கள் குழுவின் கேரள பயணம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# விதிமீறல்: தவெக வேட்பாளர்கள் கோடிக்கணக்கில் செலவு செய்தார்களா? தேர்தல் ஆணையத்தில் புகார்!

சென்னை, அக். 05–
மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் தவெக வேட்பாளர்கள் கோடிக்கணக்கில் செலவு செய்ததாக தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் செவ்வாய்க்கிழமையில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. தவெக, திமுக, அதிமுக, இடதுசாரிகள், நாதக என ஐந்து முனைப் போட்டி நிலவும் இவ்விரு தொகுதிகளிலும் ஞாயிற்றுக்கிழமை (அக். 4) மாலை 6 மணியுடன் தேர்தல் பிரசாரம் நிறைவடைந்தது.

இந்த இடைத்தேர்தல் பிரசாரத்தில் தவெக வேட்பாளர்களை ஆதரித்து முதல்வரும் தவெக தலைவருமான விஜய்யும், திமுக வேட்பாளர்களை ஆதரித்து கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலினும், அதிமுக வேட்பாளர்களை ஆதரித்து எடப்பாடி பழனிசாமியும், நாதக வேட்பாளர்களை ஆதரித்து சீமானும், அதேபோல் இடதுசாரிகள் கட்சிகளின் தலைவர்களும் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.



இந்த நிலையில், தேர்தல் பிரசாரத்தில் தவெக அதிகளவில் செலவழித்ததாகக் கூறி, தவெக மீது தேர்தல் ஆணையத்தில் மதுரையைச் சேர்ந்த வழக்குரைஞர் அமலன் புகார் அளித்துள்ளார்.

இவ்விரு தொகுதிகளிலும் தவெக தலைவர் விஜய் பிரசாரத்துக்குச் சென்ற போதிலும், சாலைவலம் சென்றபோதிலும் பல கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டதாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு தொகுதிகளிலும் முதல்வர் விஜய்யின் வருகையையொட்டி, சுமார் 80 கி.மீ. தொலைவுக்குச் சாலையின் இருபுறங்களிலும் தடுப்புகள் அமைக்கப்பட்டது, உயரமான கொடிக் கம்பங்கள், வேறு ஊர்களில் இருந்து ஆட்கள் வரவழைக்கப்பட்டது, வரவேற்பு, தாரை – தப்பட்டை என பல கோடி ரூபாயை தவெகவினர் செலவழித்ததாகத் தெரிகிறது.

தேர்தல் பிரசாரத்துக்காக ரூ. 40 லட்சம் செலவழிக்கலாம் என தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ள நிலையில், தவெகவினர் பல கோடி ரூபாய் செலவு செய்திருக்க வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. தேர்தல் ஆணையம் நிர்ணயித்ததைவிட அதிகளவில் செலவு செய்வது தேர்தல் விதிகளுக்கு முரணானது.

தேர்தல் பிரசாரத்துக்கு தவெகவினர் செலவிட்ட தொகையைக் கணக்கிட்டு, அதனை அக்கட்சியின் வேட்பாளர்களின் குறிப்பில் சேர்த்தால், தேர்தல் ஆணையத்தின் நிர்ணயத் தொகையைவிட பல மடங்கு அதிகம் வரும்.

ஆகையால், தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி தவெக வேட்பாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, இருவரும் தேர்தலில் போட்டியிட தடைவிதிக்க வேண்டும் என புகார் மனுவில் வழக்குரைஞர் அமலன் தெரிவித்துள்ளார்.

# துவரம் பருப்பு கொள்முதல் விலையில் கிலோவுக்கு ரூ.31 மிச்சம்! தவெக அரசு சாதனை!

சென்னை, அக். 05–
தமிழகத்தில் உள்ள நியாயவிலைக் கடைகளில் மக்களுக்கு வழங்கப்படும் துவரம் பருப்பைக், கடந்த காலங்களைக் காட்டிலும் குறைவான விலையில் கொள்முதல் செய்து தவெக அரசு ரூ.187 கோடி மிச்சம் பிடித்திருப்பதாக குடிமைப் பொருள் வழங்கல் துறை தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள நியாய விலைக் கடைகளில், அரிசி, சர்க்கரை, கோதுமையுடன் துவரம் பருப்பும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதற்காக தமிழக அரசு துவரம் பருப்பு கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. இதுகுறித்துகுடிமைப்பொருள்



வழங்கல் துறை வெளியிட்டிருக்கும் தகவலில், துவரம் பருப்பு கொள்முதல் விலையை குறைவாகக் கொடுத்து கடந்த மூன்று மாதங்களில் ரூ.187 கோடி அளவுக்கு தவெக அரசு மிச்சம் பிடித்துள்ளது.

அதாவது கடந்த திமுக ஆட்சியில் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.109.15க்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், தவெக அரசு ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.77.89–க்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தற்போது முந்தைய விலையுடன் ஒப்பிடுகையில் ரூ.31 குறைவாக கொள்முதல் செய்யப்பட்டது. இதனால், கடந்த மூன்று மாத காலத்தில் செலவுத் தொகையில் ரூ.187 கோடி மிச்சம் பிடித்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

அதாவது, கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் துவரம் பருப்பு கொள்முதலுக்கு திமுக ஆட்சியில் ரூ.654 கோடி செலவிடப்பட்டது. ஆனால் தவெக ஆட்சியில் ரூ.467 கோடி செலவிடப்பட்டு, ரூ.187 கோடி மிச்சம் பிடிக்கப்பட்டுள்ளது. நியாயவிலைக் கடைகளுக்கு வழங்க 60 ஆயிரம் டன் துவரம் பருப்பு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விலை குறைந்தாலும் தரத்தில் எவ்வித குறையும் இல்லை என்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறை தெளிவுபடுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.



## குலதெய்வம் சபிக்குமா?



குடும்பத்தில் ஏற்படும் தடைகள், கடன் சுமை, தொழில் பின்னடைவு போன்றவற்றுக்குக் குலதெய்வத்தின் கோபமே காரணம் என்று சிலர் நம்புகின்றனர். ஆனால், குலதெய்வம் தாயைப் போன்றது என்றும், தன்னை வழிபடுபவர்களை ஒருபோதும் சபிப்பதில்லை

குலதெய்வ வழிபாடு, தலைமுறைகளை இணைக்கும் ஆன்மிக மரபாகப் பல குடும்பங்களில் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த வழிபாட்டை அச்சத்துடன் அணுகாமல், நம்பிக்கையுடனும் மன அமைதியுடனும் தொடர வேண்டும் என்பதே அவரது கருத்தாகும்.

**குலதெய்வம் தெரியாவிட்டால் என்ன செய்வது?**

ஜாதகத்தில் பூர்வ புண்ணிய ஸ்தானமாகக் கருதப்படும் ஐந்தாம் வீட்டை ஆய்வு செய்வதன் மூலம் குலதெய்வத்தை அறியலாம் என உமா வெங்கட் கூறியுள்ளார். ஜாதகக் குறிப்பு இல்லாதவர்கள் ஜோதிடப் பிரசன்ன முறையை அணுகலாம்.

குலதெய்வம் எது என்று தெரியாதவர்கள் குழப்பமடையத் தேவையில்லை என்றும், தங்களுக்கு விருப்பமான தெய்வத்தை மனமார வழிபடலாம் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். காலப்போக்கில் குடும்ப மரபு குறித்த தெளிவும் வழிகாட்டுதலும் கிடைக்கும்

**குடும்பக் கஷ்டங்களுக்கு தெய்வத்தின் கோபம் காரணமா?**

வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு சிரமத்தையும் குலதெய்வத்தின் சாபமாகக் கருதக்கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார். முன்னோர் ஆசியில் குறைபாடு அல்லது சூழ்நிலை மாற்றங்கள் காரணமாக இருக்கலாம் என்பது ஆன்மிக விளக்கமாகும். இவை ஜோதிட நம்பிக்கைகள் சார்ந்த கருத்துகளாகும்.

**திருமணத்திற்குப் பிறகு குலதெய்வ வழிபாடு**

திருமணமான பெண்கள் கணவர் வீட்டுக் குலதெய்வ வழிபாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கலாம் என்றும், அதே நேரத்தில் பிறந்த வீட்டின் தந்தை வழிக் குலதெய்வ வழிபாட்டையும் தொடரலாம். குலதெய்வ வழிபாட்டில் பயத்தைவிட அன்பும் பக்தியும் முக்கியம் என்பதே மையக்கருத்தாகும்.

## அறநிலையத்துறை கமிஷனர் எச்சரிக்கை: கோவில் செயல் அலுவலர்கள் அதிருப்தி!



சென்னை, அக். 05–
'கோவில் வளாகங்களில், வீடியோ மற்றும் புகைப்படங்கள் எடுக்க அனுமதி அளிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் மீது, உடனடியாக துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்' என, ஹிந்து சமய அறநிலையத்துறை கமிஷனர் வினய் விடுத்துள்ள எச்சரிக்கை, கோவில் செயல் அலுவலர்கள் மத்தியில், கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. அறநிலையத்துறை கமிஷனர் வினய் அனுப்பியதாக, இறுதி எச்சரிக்கை என்ற பெயரில், கோவில் செயல் அலுவலர்களின், 'வாட்ஸாப் குரூப்பில்' தகவல் ஒன்று பகிரப்படுகிறது. அதில், கூறியிருப்பதாவது:

கோவில் வளாகத்திற்குள், ஊடகப் பதிவு, வீடியோ அல்லது படப்பிடிப்புக்கு அனுமதி அளிக்கப்பட்டு, அவை பின்னர் ஊடகங்களில் வெளியானாலோ அல்லது கோவில் வளாகத்திற்கு வெளியே பரவினாலோ, சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது உடனடியாகவும், உறுதியாகவும், துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

சில நாட்களாக, கோவில் வளாகத்திற்குள், நடிகர்கள் மற்றும் பிற முக்கிய பிரமுகர்கள் இடம் பெறும், 'வீடியோக்கள்' வெளியாகி வருகின்றன. முறையான அனுமதியின்றி, கோவில் வளாகத்திற்குள், ஊடகப்பதிவு அல்லது வீடியோ பதிவு எடுக்க அனுமதிக்கப்படுவதையே, இது காட்டுகிறது. துறையின் முன் அனுமதியின்றி, கோவில் வளாகத்திற்குள், ஊடகப்பதிவு, வீடியோ பதிவு, படப்பிடிப்பு போன்றவற்றை அனுமதிக்கக் கூடாது. இது இறுதி எச்சரிக்கை. இனி வரும் காலங்களில் விதிமீறல் நிகழ்ந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அல்லது பணியாளர்கள் மீது, கடுமையான துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இது, கோவில் செயல் அலுவலர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

## எகிறவைக்கும் 8-வது சம்பள கமிஷன்!



புதுடெல்லி, அக். 05–
மத்திய அரசு ஓய்வூதியதாரர்கள் 8வது சம்பள கமிஷன் பரிந்துரைகளை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். தற்போது குறைந்தபட்ச மாத ஓய்வூதியம் ₹9,000 ஆக உள்ளது. ஓய்வூதிய உயர்வுக்கான ஃபிட்மெண்ட் ஃபேக்டரை 2.86 முதல் 3.83 வரை நிர்ணயிக்க அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளதாகச் செய்தி தெரிவிக்கிறது. இந்த விகிதங்களின்படி கணக்கிட்டால், குறைந்தபட்ச ஓய்வூதியம் ₹25,740 முதல் ₹34,470 வரை உயரக்கூடும். ஆனால், இவை கோரிக்கைகளின் அடிப்படையிலான கணக்கீடுகள் மட்டுமே; அரசு அறிவித்த தொகைகள் அல்ல. அமலாக்கம் தாமதமானால் நிலுவைத்தொகை கிடைக்கலாம் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது. அதன் அளவு, அமலுக்கு வரும் தேதி மற்றும் வழங்கும் முறை ஆகியவை அரசின் முடிவைப் பொறுத்தவை.

இறுதி ஓய்வூதிய உயர்வு, சம்பள கமிஷன் பரிந்துரைகளுக்கும் மத்திய அரசின் ஒப்புதலுக்கும் பின்னரே உறுதியாகும். எனவே, அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் வரை பகிரப்படும் தொகைகளை உறுதியான பலனாகக் கருத முடியாது. ஓய்வூதியதாரர்கள் அரசின் அறிவிப்புகள் மூலம் இறுதி விவரங்களை அறிந்துகொள்ளலாம்.




## சூடான தோசைக் கல்லில் குளிர்ந்த நீர் ஊற்றாதீர்கள்!



சமைத்தவுடன் சூடாக இருக்கும் தோசைக் கல் அல்லது கடாயில் உடனடியாகக் குளிர்ந்த நீரை ஊற்றுவது பாத்திரத்தைச் சேதப்படுத்தலாம். இந்தத் திடீர் வெப்பநிலை மாற்றம் 'வெப்ப அதிர்ச்சி' எனப்படுகிறது. இதனால் பாத்திரத்தின் அடிப்பகுதி வளைந்து, சமைக்கும்போது வெப்பம் சீராகப் பரவாமல் போகலாம். உணவின் சில பகுதிகள் கருகவும், மற்ற பகுதிகள் சரியாக வேகாமல் இருக்கவும் வாய்ப்புள்ளது. நான்–ஸ்டிக் பாத்திரங்களின் பூச்சும் சேதமடையக்கூடும்.

எனவே, சமையல் முடிந்ததும் அடுப்பை அணைத்து, பாத்திரத்தை இயல்பாகக் குளிரவிட வேண்டும். பின்னர் கழுவுவது நல்லது. உணவு ஒட்டியிருந்தால், குளிர்ந்த பாத்திரத்தில் வெதுவெதுப்பான நீரும் சிறிதளவு பாத்திரம் கழுவும் திரவமும் சேர்த்து ஊறவைத்துச் சுத்தம் செய்யலாம். மென்மையான தேய்ப்பானைப் பயன்படுத்துவதுடன், தயாரிப்பாளரின் பராமரிப்பு வழிமுறைகளையும் பின்பற்றலாம். இரும்புப் பாத்திரங்களைக் கழுவியதும் நன்றாக உலர்த்துவது துருப்பிடிப்பைத் தவிர்க்க உதவும். முறையான பராமரிப்பு பாத்திரங்களின் ஆயுளை நீட்டிப்பதுடன், சமையலையும் எளிதாக்கும். அவசரமாகக் குளிர்விக்க முயல்வதைத் தவிர்த்து, பாத்திரத்தின் தன்மைக்கேற்ப சுத்தம் செய்வதே சிறந்த நடைமுறையாகும்.




## அரசியல் மாநாடு போல் நடந்த சிவகார்த்திகேயன் ரசிகர்கள் சந்திப்பு கூட்டம்!



நடிகர் சிவகார்த்திகேயன் போரூர் அருகே நற்பணி இயக்க ரசிகர்கள் சந்திப்பை நடத்தினார். சுமார் 2000 ரசிகர்கள் வெள்ளை சீருடை அணிந்து நிகழ்ச்சியில் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் ரசிகர்களுடன் கலந்துரையாடிய சிவகார்த்திகேயன் பேசும் போது, வாழ்க்கையில் குடும்பத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். நன்றாக படித்து நல்ல முறையில் சம்பாதித்து குடும்பத்துடன் பொறுப்போடு வாழ வேண்டும்.

தினமும் 15 நிமிடங்களாவது புத்தகங்களை படிக்கும் பழக்கத்தை உருவாக்கி கொள்ளுங்கள். புத்தகம் படிப்பதன் மூலம் சிந்தனை திறன் மேம்படும். சமூக வலைதளங்களில் அதிக நேரம் செலவிடுவதை குறைத்து புத்தக வாசிப்புக்கு அதிக நேரம் ஒதுக்குங்கள். நம்மை விமர்சிப்பவர்கள் விமர்சித்து கொண்டிருப்பார்கள். விமர்சனங்களை பற்றி கவலைப்படாமல் உங்களுடைய பணிகளில் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## லோகேஷ் கனகராஜை இயக்கும் மிஷ்கின்!



இயக்குநர் மிஷ்கின் இயக்குநர் லோகேஷ் கனகராஜை வைத்து புதிய திரைப்படத்தை இயக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். நேர்காணலில் பேசிய இயக்குநர் மிஷ்கின், "பிசாசு – 2 மற்றும் டிரெயின் திரைப்படங்கள் வெளியானாலும் சரி வெளியாகவில்லை என்றாலும் சரி, எனக்கு எந்தக் கவலையும் இல்லை. நான் அதைக் கடந்து சென்றுவிட்டேன். இப்போது, லோகேஷ் கனகராஜுக்கு கதை சொல்லியிருக்கிறேன். அவருக்கும் பிடித்துவிட்டது. எப்போது வருகிறாரோ அப்போது அப்படத்தை இயக்குவேன். மேலும், நடிகர் நரேனை வைத்து அஞ்சாதே – 2 திரைப்படத்தை இயக்கத் திட்டமிட்டுள்ளேன். இதுபோக, இச்சை என்கிற கதையை எழுதி முடித்துள்ளேன். 26 கதைகள் இருக்கின்றன." எனத் தெரிவித்துள்ளார்.

# திட்ட தலைவர் தற்கொலை குறிப்பில் ஞானேஷ் குமார் பெயர்! சூடுபிடிக்கும் 2006 கேரள வழக்கு!



திருவனந்தபுரம், அக். 05–

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக 2006ஆம் ஆண்டு கேரளத்தில் பதியப்பட்ட லஞ்ச முறைகேடு வழக்கை மீண்டும் விசாரிக்குமாறு கேரள உள்துறை அமைச்சர் ரமேஷ் சென்னிதலா உத்தரவிட்டுள்ளார்.

2006ஆம் ஆண்டு கேரளத்தில், உலக வங்கி சாலை அமைக்கும் திட்டத்தின்போது, மலேசிய பொறியாளரின் தற்கொலைக் குறிப்பில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார்தான் காரணம் என எழுதப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மலேசியாவைச் சேர்ந்த லீ சீ பீன், தன்னுடைய மனைவி மற்றும் நிறுவன அதிகாரிக்கு என தனித்தனியாக தற்கொலைக் கடிதம் எழுதியிருந்த நிலையில், இரண்டிலுமே, லஞ்சம் கொடுக்க மறுத்ததால் தன்னை ஞானேஷ் குமார் துன்புறுத்தியதாகக் குறிப்பிட்டிருந்தார். இந்த சம்பவம் மிகவும் முக்கியமானது, அதனால், மீண்டும் விசாரணைக்கு உத்தரவிடுகிறேன் என்று செய்தியாளர்களிடம் பேசிய சென்னிதலா தெரிவித்திருப்பதோடு, முதல்கட்ட விசாரணையில், ஏதோ ஒரு அழுத்தம் காரணமாக பாதியிலேயே கைவிடப்பட்டதையும் குறிப்பிட்டுள்ளார்.

கேரள மாநில போக்குவரத்துத் துறை, உலக வங்கியுடன் இணைந்து சாலைகளை மேம்படுத்தும் திட்டம் 2006ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட போது மலேசியா மற்றும் கொச்சியைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. அதன் திட்ட தலைவராக லீ நியமிக்கப்பட்டார். இந்த திட்டம் பாதியில் இருந்தபோதே, மலேசியா திரும்பிய லீ தற்கொலை செய்துகொண்டு மரணமடைந்தார்.

பொதுப் பணித் துறை அதிகாரிகள், எந்தக் காரணமும் இன்றி, செலவினத் தொகையை வழங்க மறுப்பதாகவும், லஞ்சம் கொடுக்க மறுத்ததால், தன்னை துன்புறுத்துவதாகவும் தற்கொலைக் குறிப்பில் பதிவு செய்திருந்தார். அப்போது கேரள பொதுப் பணித்துறை செயலராக ஞானேஷ்குமார் இருந்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டின் கீழ், ஞானேஷ்குமார் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். ஆனால், விசாரணை முழுமையடையாமல் விட்டுவிடப்பட்டது. இது குறித்து பேசிய சென்னிதலா, ஞானேஷ்குமார் பதவியிலிருந்தபோது, அந்தத் துறையில் ஒரு தவறு நடந்துள்ளது. எனவே, இதனை விசாரித்து குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றத்தை நிரூபிக்க வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியிருக்கிறார்.

[தற்கொலை எண்ணங்களிலிருந்து விடுபடுவதற்கான ஆலோசனைகள் பெற தமிழக அரசு நல்வாழ்வுத் துறை ஹெல்ப்லைன் 104 மற்றும் சினேகா தற்கொலைத் தடுப்பு ஹெல்ப்லைன் 044–24640050].

# ஈரான் எண்ணெய் வளத்துறை அமைச்சர் திடீர் ராஜினாமா!




ஈரான், அக். 05–

ஈரான் எண்ணெய் வளத் துறை அமைச்சர் மொஹ்சென் பக்னெஜாத் தனது பதவியை திடீரென ராஜினாமா செய்துள்ளார். இதையடுத்து அரசுக்கு சொந்தமான தேசிய ஈரானிய எண்ணெய் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஹமீத் போவர்ட் இடைக்கால அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதாக அரசு ஊடகம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது. ராஜினாமா செய்த மொஹ்சென் பக்னெஜாத், 2024 முதல் ஒபெக் உறுப்பு நாட்டின் எண்ணெய் அமைச்சராக இருந்து வந்துள்ளார்.

இதுகுறித்து அதிபர் அலுவலகத்தின் தகவல் தொடர்பு துணைத் தலைவர் மெஹ்தி தபதபாயி அரசுத் தொலைக்காட்சியிடம் கூறுகையில், பக்னெஜாத் தனிப்பட்ட காரணங்களுக்காக நீண்ட காலத்திற்கு முன்பே ராஜினாமா செய்தார். பக்னெஜாத்தின் தொடர் வற்புறுத்தலால் அவரது ராஜிநாமாவை அதிபர் மசூத் பெசெஷ்கியன் ஏற்றுக்கொண்டார் என்று தெரிவித்தார்.

பக்னெஜாத் ராஜிநாமா செய்திக்கு முன்பு, நாங்கள் விற்ற எண்ணெய்க்கான வருவாய் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது, அது தொடரும் என்று கூறியதாக அரசு ஊடகம் தெரிவித்திருந்தது. ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே ஏழு மாதங்களாக நடந்து வரும் போரினால் நாட்டின் பொருளாதாரத்தின் மீது அழுத்தம் ஏற்பட்டுள்ள நிலையில் பக்னெஜாத் ராஜிநாமா செய்துள்ளார்.

# பெண்கள், திருநங்கைகள் இலவசமாக பேருந்தில் பயணிக்க இளஞ்சிவப்பு அட்டை கட்டாயம்!




புதுடெல்லி, அக். 05–

பெண் குடியிருப்பாளர்கள் 'பிங்க் சஹேலி ஸ்மார்ட் கார்டு' மூலம் மட்டுமே டி. டி. சி மற்றும் கிளஸ்டர் பேருந்துகளில் இலவச பயணத்தைப் பெற முடியும் என்று தில்லி அரசு ஞாயிற்றுக்கிழமை அறிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: டெல்லி போக்குவரத்துக் கழகம் (இலவச மற்றும் சலுகை பாஸ்) (இரண்டாவது திருத்தம்) விதிமுறைகள், 2026 இன் கீழ் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தில்லியில் வசிக்கும் பெண் பயணிகள் தில்லி போக்குவரத்துக் கழகம் (டி. டி. சி) மற்றும் கிளஸ்டர் பேருந்துகளில் இலவசமாக பயணிக்க முடியும், ஏசி மற்றும் ஏசி அல்லாதவை, பிங்க் சஹேலி ஸ்மார்ட் கார்டைப் (என். சி. எம். சி) பயன்படுத்தி மட்டுமே. இருப்பினும், பயணத்திற்கு பொருந்தக்கூடிய கட்டணத்தில் டிக்கெட் வாங்க அவர்களுக்கு விருப்பம் இருக்கும். இலவச பயண வசதிக்கு தகுதியற்ற பெண்கள் பொருந்தக்கூடிய கட்டணத்தில் டிக்கெட் வாங்குவதன் மூலம் டி. டி. சி மற்றும் கிளஸ்டர் பேருந்துகளில் பயணிக்கலாம்.

தில்லியில் வசிக்கும் திருநங்கைகளுக்கும் இந்த விதிகள் பொருந்தும். இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்ட என். சி. எம். சி அடிப்படையிலான அட்டை, பல நீட்டிப்புகளுக்குப் பிறகு அரசாங்கத்தால் முன்னர் வழங்கப்பட்ட காகித அடிப்படையிலான இளஞ்சிவப்பு டிக்கெட்டுகளாக மாற்றியது. செப்டம்பர் 30 முதல் இலவச பயண வசதியைப் பெறுவதற்கு பிங்க் சஹேலி ஸ்மார்ட் கார்டு கட்டாயமாக இருக்கும் என்று போக்குவரத்துத் துறை முன்பு உத்தரவிட்டது.

டிப்போ மற்றும் பஸ் அறிவிப்புகள், சமூக ஊடகங்கள், அச்சு ஊடகங்கள் மற்றும் பிற சேனல்கள் மூலம் ஸ்மார்ட் கார்டு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தும். இந்தாண்டு தொடக்கத்தில் தொடங்கப்பட்டதிலிருந்து சுமார் 19 லட்சம் பெண்கள் ஸ்மார்ட் கார்டு வசதியைப் பெற்றுள்ளனர். இன்னும் பதிவு செய்யாத பெண்களுக்கு பதிவு மற்றும் அட்டை முறைக்கு தொடர்ந்து அணுகல் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனியார் சொகுசுப் பேருந்து கவிழ்ந்து விபத்து: 14 பயணிகள் காயம்!



கள்ளக்குறிச்சி, அக். 05–

சென்னையிலிருந்து சுமார் 36 பயணிகளுடன் தனியார் சொகுசுப் பேருந்து மதுரைக்கு ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு புறப்பட்டது. இப்பேருந்தை திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் கக்கன் காலனியைச் சேர்ந்த பா. பாலமுருகன் (30) ஓட்டிச் சென்றார்.

இந்த பேருந்து திங்கள்கிழமை காலை 5 மணிக்கு கள்ளக்குறிச்சி மாவட்டம் , உளுந்தூர்பேட்டை அருகிலுள்ள பாதூர் பேருந்து நிறுத்தம் அருகே வந்த போது, ஓட்டுநரின் கவனக்குறைவு காரணமாக சாலையின் இடதுப் புறத்தில் ஒரு பக்கமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பேருந்து ஓட்டுநர் பாலமுருகன், பேருந்து உதவியாளர் திருச்சி ரா. பைசல் (18), மதுரை ஞா. ஐஸ்வர்யா (18), அகிலன் (14), ஞா.முத்து லட்சுமி (48), சென்னை புதுப்பேட்டை ஜோ. ஜோசினி (23), குரோம்பேட்டை அ. ஹாசினி (23) , அ. சஞ்சய் (22) , தாம்பரம் பா.சைலஜா (26), பெரம்பலூர் து. கிருஷ்ண மூர்த்தி (39), மதுரை கு. ராஜேந்திரன் (68) உள்ளிட்ட 14 பேர் காயம் அடைந்தனர். விபத்து குறித்து தகவலறிந்த திருநாவலூர் போலீசாரும் , உளுந்தூர்பேட்டை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய வீரர்களும் நிகழ்விடம் சென்று, விபத்தில் காயமடைந்தவர்களை மீட்டனர். தொடர்ந்து அனைவரும் சிகிச்சைக்காக உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மேலும் விபத்து குறித்து திருநாவலூர் போலீசார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# குரூப் 4 அறிவிப்பு அக் 6!



சென்னை, அக். 05–

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப் 4 தேர்வு அறிவிப்பு செவ்வாய்க்கிழமை (அக். 6) வெளியாகிறது. தமிழ்நாடு அரசுத் துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) தேர்வு செய்து வருகிறது.

2026 ஆம் ஆண்டுக்கான டிஎன்பிஎஸ்சி வருடாந்திர தேர்வு அட்டவணையின்படி, 6 தேர்வுகளில் 5 தேர்வுகளுக்கான அறிவிப்புகள் வெளியிடப் பட்டு, அவற்றில் குரூப் 1, 2, 2ஏ ஆகிய 3 தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, தேர்வு அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி அக். 6 ஆம் தேதியில் டிஎன்பிஎஸ்சி இணையதளத்தில் குரூப் 4 தேர்வு அறிவிக்கப்பட்டு, டிச. 20 ஆம் தேதியில் தேர்வு நடைபெறும்.

கடந்த 2024 ஆம் ஆண்டில் 4,662 காலியிடங்கள் இடம்பெற்றிருந்த நிலையில், நடப்பாண்டில் 10,000 பணியிடங்கள் நிரப்பப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இந்தாண்டில் குரூப் 4 தேர்வுக்கு சுமார் 15 லட்சம் பேர் விண்ணப்பிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## வேலை வாய்ப்பு

## ITBP வேலைவாய்ப்பு 37 இடங்கள்!




இந்தோதிபெத்திய எல்லைக் காவல் படையில் (ITBP), தலைமைக் காவலர் பணிகளுக்கான

மொத்தம் 37 காலிப்பணியிடங்களுக்கு இணையவழியாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விவரம் தகவல்

நிறுவனம் இந்தோதிபெத்திய எல்லைக் காவல் படை (ITBP)

வேலை வகை மத்திய அரசு வேலை

பணி நியமன வகை நிரந்தரப் பணி

மொத்த காலிப்பணியிடங்கள் 37

தலைமைக் காவலர் கல்வி மற்றும் மன அழுத்த ஆலோசகர் 16 இடங்கள்

தலைமைக் காவலர் மோட்டார் மெக்கானிக் 21இடங்கள்

பணியிடம் இந்தியா முழுவதும்

விண்ணப்பிக்கத் தொடங்கும் நாள் 28.09.2026 — அதிகாலை 12:01 மணி

விண்ணப்பிக்கக் கடைசி நாள்

27.10.2026 — இரவு 11:59 மணி

விண்ணப்பிக்கும் முறை இணையவழி

அதிகாரப்பூர்வ இணையதளம்: recruitment.itbpolice.nic.in

# தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம் வெளி மாநிலத்தவருக்கு பொருந்துமா?



சென்னை, அக். 05–

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கழனிவாசலை சேர்ந்தவர் உமா மகேஸ்வரி. இவர், கர்நாடக மாநிலம் மைசூரை சேர்ந்தவரை திருமணம் செய்துள்ளார். இரண்டாவது பிரசவத்திற்காக, கடந்த ஆறு மாதங்களாக, காரைக்குடியில் உள்ள தாய் வீட்டில் தங்கி, அருகில் உள்ள முத்துப்பட்டணம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ பரிசோதனை செய்து வந்தார்.

கடந்த செப்டம்பர் 17–ந்தேதி, உமா மகேஸ்வரிக்கு, காரைக்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்தது. இந்நிலையில், தமிழக அரசின், 'தாய் மாமன் தங்க மோதிரம்' திட்டத்தில், உமா மகேஸ்வரியின் குழந்தைக்கு தங்க மோதிரம் வழங்க, கடந்த, 1–ந்தேதி, 'டோக்கன்' வழங்கப்பட்டது.

ஆனால், அவர் சமர்ப்பித்த ஆதார் அட்டையில், முகவரி மைசூர் என குறிப்பிட்டிருந்ததால், கணினியில் பதிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. எனவே, தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தில், உமா மகேஸ்வரிக்கு மோதிரம் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக, பொது சுகாதாரத்துறை அளித்துள்ள விளக்கத்தில், உமா மகேஸ்வரியின் ஆவணங்கள் அடிப்படையில், அவர் கர்நாடகா மாநிலத்தை சேர்ந்தவர் என்பது தெரிய வருகிறது. பிரசவத்திற்காக, தன் தாயின் இல்லத்திற்கு வந்தவர், காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனையில், செப்டம்பர் 17–ந்தேதி, அறுவை சிகிச்சை வழியே குழந்தையை பெற்றேடுத்தார்.

உமா மகேஸ்வரிக்கு, அனைத்து மருத்துவ சிகிச்சைகளும், கட்டணமில்லாமல் வழங்கப்பட்டதுடன், பிரசவத்திற்கு பிந்தைய காலத்திலும், போதுமான மருத்துவ பராமரிப்பு வழங்கப்பட்டது. அவர், செப்டம்பர் 22–ந்தேதி, மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார். அவர், 'தாய்மாமன் தங்க மோதிரத் திட்டத்தின்' கீழ் பயன் பெற இயலாது'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881






## இன்றைய கார்ட்டூன்




## ‘வெற்றிப் பயணம்’ வழிகாட்டுதல்கள்...?



சென்னை, அக். 05–

வெற்றிப் பயணம் திட்டம் 02.10.2026 முதல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மாநகர, நகர்ப்புற Ordinary, Express, L.S.S., Deluxe, புறநகர் Ordinary மற்றும் மலைப்பகுதி Ordinary சேவைகளில் மகளிர், சிறுமியர் மற்றும் திருநர் பயணிகள் கட்டணமின்றி பயணம் செய்யலாம். இத்திட்டத்தில் பயனடைவதற்கு வருமான உச்சவரம்பு ஏதும் இல்லை; பயணங்களின் எண்ணிக்கைக்கும் வரம்பில்லை. இத்திட்டத்தை எளிமையாகவும், ஒரே மாதிரியான நடைமுறையிலும் செயல்படுத்துவதற்காக கீழ்க்கண்ட அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும்.

* வெற்றிப் பயணம் திட்டத்தில் இடம்பெறும் வழித்தடங்களின் Route Master / Service Master விவரங்கள் புதுப்பிக்கப்பட்டு, ஒவ்வொரு தகுதியான சேவையும் ETM / மென்பொருள் அமைப்பில் சரியாக இணைக்கப்பட வேண்டும். ZERO Ticket உருவாக்கம் முன்கூட்டியே சோதித்து உறுதி செய்யப்பட வேண்டும்.

* தேவையான அளவு செயல்படும் ETM கருவிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றின் சார்ஜிங் /இணைப்பு வசதிகள் செயல்பாட்டில் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும். ETM பழுது ஏற்பட்டால் உடனடியாக Service Call பதிவு செய்து, மாற்று நடைமுறை மூலம் ZERO Ticket வழங்கல் தடையின்றி தொடரப்பட வேண்டும்.

* டிஜிட்டல் வழித்தட பலகை உள்ள பேருந்துகளில் “வெற்றிப் பயணம்” தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட வேண்டும். டிஜிட்டல் வழித்தட பலகை இல்லாத பேருந்துகளில் அங்கீகரிக்கப்பட்ட “வெற்றிப் பயணம்” ஸ்டிக்கர் மட்டும் ஒட்டப்பட வேண்டும்.

* ஓட்டுநர்கள், நடத்துநர்கள், பரிசோதகர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு திட்டத்தின் தகுதி, ZERO Ticket வழங்கும் முறை, பயணிகள் சேவை மற்றும் புகார் கையாளும் நடைமுறை குறித்து பணிமனை அளவில் முன்கூட்டியே விளக்கக் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

* மகளிர் மற்றும் திருநர் பயணிகளிடமிருந்து எந்தக் கட்டணமும் வசூலிக்கக் கூடாது. ஒவ்வொரு தகுதியான பயணத்திற்கும் ZERO Ticket கட்டாயமாக வழங்கப்பட வேண்டும். ZERO Ticket வழங்காமல் விடுதல் அல்லது தவறாகப் பயன்படுத்துதல் விதிகளின்படி நடவடிக்கைக்குரியதாகும்.

ZERO Ticket வழங்கும் நடைமுறை:

Town Ordinary சேவைகளில் தற்போது நடைமுறையில் உள்ள Tick–eting நடைமுறை மாற்றமின்றி தொடர வேண்டும். Town Express , L.S.S., Deluxe, Mofussil Ordinary மற்றும் Ghat Ordinary A ZERO Ticket–ல் பயணியின் From / Origin மற்றும் To / Destination விவரங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

ETM செயலிழந்தால், முன் அச்சிடப்பட்ட / Manual ZERO Ticket வழங்கப்பட வேண்டும். தேவையான From–To / கட்டண விவரம். பயணிகளின் எண்ணிக்கை, தடம் எண் மற்றும் தேதி ஆகியவை Waybill / Ticket Register–ல் முறையாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

* டிக்கெட் பரிசோதகர்கள், சோதனை அலுவலர்கள், பேருந்தில் பயணம் செய்யும் தகுதியான மகளிர், திருநர் பயணிகளுக்கு ZERO Ticket வழங்கப்பட்டுள்ளதா என்பதையும், சேவை வகை, வழித்தடம் மற்றும் அட்டவணை முறையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதையும் சரிபார்க்க வேண்டும். ZERO Ticket இல்லாத தகுதியான பயணியிடமிருந்து அபராதம் வசூலிக்கக் கூடாது

* Inter–State Passing–through Or–dinary தமிழ்நாட்டிற்குள் இருந்தால் மட்டுமே ZERO Ticket வழங்கப்பட வேண்டும். வழித்தடம் இடையில் அண்டை மாநிலம், யூனியன் பிரதேசம் வழியாகச் சென்றாலும் இச்சலுகை தொடரும். பயணியின் ஏறும் இடம் அல்லது இறங்கும் இடம் அண்டை மாநிலம், யூனியன் பிரதேசத்தில் இருந்தால் நடைமுறையிலுள்ள Fare Ticket வழங்கப்பட வேண்டும். இதற்கேற்ப ETM /மென்பொருள் அமைப்பில் தேவையான வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.

* ETM மென்பொருளில் வெற்றிப் பயணம் திட்டத்திற்கான ZERO Ticket மற்றும் தேவையான அறிக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். Town Ordi–nary சேவைகளைத் தவிர பிற சேவைகளில் From / Origin மற்றும் To / Destination விவரங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்படும் வகையில் மென்பொருள் அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். சேவை வகை வாரியாக தினசரி, மாதாந்திர அறிக்கைகள் உருவாக்கப்பட வேண்டும்.

* ETM செயலிழப்பின்போது வழங்கப்பட்ட Manual ZERO Ticket விவரங்களும் இழப்பீட்டுத் தொகை கணக்கீட்டில் சேர்க்கப்பட வேண்டும். ஏதேனும் வேறுபாடுகள் இருந்தால் உடனடியாகச் சரிபார்த்து திருத்தப்பட வேண்டும். அனைத்து தொடர்புடைய பதிவுகளும் தணிக்கைக்கு ஏற்றவாறு முழுமையாகப் பராமரிக்கப்பட வேண்டும்.

* ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட ZERO Ticket–களின் எண்ணிக்கை மற்றும் மதிப்பு சேவை வகை வாரியாகத் தொகுக்கப்பட வேண்டும். ETM பதிவுகள், Manual ZERO Ticket, Way–bill / Ticket Register, தினசரி டிக்கெட் விவரங்கள் மற்றும் கணக்குப் பதிவுகள் ஒன்றோடொன்று ஒப்பிட்டு சரிபார்க்கப்பட வேண்டும்.

* முக்கிய பேருந்து நிலையங்கள், கல்வி நிறுவனங்கள், தொழிற்பகுதிகள், மருத்துவமனைகள் மற்றும் சந்தைப் பகுதிகளில் கள கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். நெரிசல், நீண்ட காத்திருப்பு, தாமதம் மற்றும் சேவை குறைபாடுகள் கண்டறியப்பட்டால் உடனடியாகத் திருத்தநடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

* ஓட்டுநர்கள் நிர்ணயிக்கப்பட்ட வழித்தடம் மற்றும் நேர அட்டவணைப்படி பேருந்துகளை இயக்க வேண்டும். பேருந்துகள் நிர்ணயிக்கப்பட்ட நிறுத்த ங்களிலேயே நிறுத்தப்பட்டு, பயணிகள் பாதுகாப்பாக ஏறவும் இறங்கவும் போதுமான நேரம் வழங்கப்பட வேண்டும்

* அனைத்து வெற்றிப் பயணம் பேருந்துகளும் நல்ல பராமரிப்பு மற்றும் இயக்கத் தகுதி நிலையில் இருக்க வேண்டும். தேவையான ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் மாற்றுப் பேருந்துகளுக்கான ஏற்பாடுகள் முன்கூட்டியே செய்யப்பட வேண்டும்.

* Not Run, Late Run, Curtailment, Route Diversion மற்றும் அனுமதியற்ற Cancellation முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். குறிப்பாக காலை, மாலை நெரிசல் நேரங்கள், பள்ளி, கல்லூரி மற்றும் அலுவலக நேரங்களில் சேவைகள் அட்டவணைப்படி இயக்கப்பட வேண்டும்.

* வெற்றிப் பயணம் தொடர்பான புகார்கள் பொதுவான Toll–Free Cus–tomer Care எண் 149 மூலம் தனியாகப் பதிவு செய்யப்பட்டு, போக்குவரத்துக் கழகம், மண்டலம், கிளை வாரியாகக் கண்காணிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் Deputy Manager (Com–mercial) Nodal Officer ஆக செயல்பட்டு, புகாரின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட்ட பின்னரே Closure செய்யப்பட வேண்டும்.

* இவ்வழிகாட்டுதல்கள் அனைத்து மண்டலங்கள், கிளைகள் மற்றும் பணிமனைகளின் அறிவிப்புப் பலகைகளில் தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட ஓட்டுநர்கள், நடத்துநர்கள், பரிசோதகர்கள் மற்றும் அலுவலர்கள் இவ்வழிகாட்டுதல்களை தெளிவாக அறிந்து செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

* இவ்வழிகாட்டுதல்கள் பெறப்பட்டவுடன், திட்டத்தை செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த Action Taken Report தலைமையகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர், இயக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை, வழித்தடங்கள் (Routes), நடைகள் (Singles) மற்றும் மேற்கொள்ளப்பட்ட செயலாக்க நடவடிக்கைகள் உள்ளிட்ட விவரங்களைக் கொண்ட முழுமையான Implementation Report தலைமையகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்கண்ட நடைமுறைகள் அனைத்தும் வெற்றிப் பயணம் திட்டம் தடையின்றி பயணிகளுக்கு எளிதாகவும், ஒரே மாதிரியான நடைமுறையில் செயல்படுவதையும், ZERO Ticket பதிவுகள், கணக்கீடு, இழப்பீட்டுத் தொகை மற்றும் தணிக்கை நடவடிக்கைகள் தெளிவாகவும் முறை யாகவும் மேற்கொள்ளப்படுவதையும் உறுதி செய்யும் வகையில் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும்.

## அக்.11-ல் பிரதமர் மோடி தமிழகம் வருகை!



சென்னை, அக். 05–

அக்டோபர் 11–ம் தேதி காலை 10.55 மணிக்கு சென்னை வரும் பிரதமர் மோடி, விமான நிலையத்தில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் பூந்தமல்லி செல்கிறார். பின்னர் நண்பகல் 12.25 மணிக்கு சென்னை ஐஐடி வளாகத்திற்குச் சென்று, மூளை அறிவியல் மையத்தைப் பார்வையிடுகிறார். தொடர்ந்து 10 ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் நிறுவனர்களுடன் கலந்துரையாடுகிறார்.




சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா ஜப்பானில் நடைபெற்று வரும் 20–வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஸ்குவாஷ் மற்றும் தடகள போட்டிகளில் பதக்கங்கள் வென்று தாயகம் திரும்பிய தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் ஜோஷ்னா சின்னப்பா, வேலவன் செந்தில்குமார், ஷமீனா ரியாஸ், ராஜேஷ் ரமேஷ் ஆகியோரை நேரில் சந்தித்து பொன்னாடை போர்த்தி, பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் சந்தீப் நந்தூரி, SDAT உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இணை முதன்மைச் செயல் அலுவலர் மயில்வாகனன், மாவட்ட வருவாய் அலுவலர் / பொது மேலாளர் (நிர்வாகம்) மருத்துவர் ரெ. சுமன் மற்றும் பொது மேலாளர் எல். சுஜாதா மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி செவிலியர்கள் போராட்டம்!




சென்னை, அக். 05–

சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகே, தமிழ்நாடு இடைநிலை சுகாதார பணியாளர்கள் சங்கத்தின் சார்பாக 1,000–க்கும் மேற்பட்ட செவிலியர்கள் மற்றும் இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மற்ற மாநிலங்களில் வழங்கப்படுவதைப் போல தங்களுக்கும் பணிப் பாதுகாப்பும், ஊதிய உயர்வும் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுகாதாரப் பணியாளர்கள் என்ற பதவிப் பெயருக்குப் பதிலாக, சமூக சுகாதார அதிகாரி (Community Health Officer) என்ற பெயரை அதிகாரப்பூர்வமாக வழங்க வேண்டும் என்றும், இப்பெயரையே பணி நியமன ஆணையும் குறிப்பிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும், மற்ற மாநிலங்களில் வழங்கப்படுவதைப் போல, தமிழகத்திலும் ஊதியம் மற்றும் ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.” பிற மாநிலங்களில் சி. எச்.ஓ.–க்களுக்கு (CHO) சுமார் ₹4,000 முதல் ₹70,000 வரை ஊதியம் வழங்கப்படுகிறது. எனவே, தங்களுக்கும் அதே அளவிலான ஊதியத்தை வழங்க வேண்டும் என்று அவர்கள் தொடர் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

## அணுசக்திக்கு நிகரான பாதுகாப்பு தேவை! ஓபன் ஏஐ மென்பொறியாளரின் ராஜிநாமா கடிதத்தில் அதிர்ச்சி!!




செயற்கை நுண்ணறிவு அல்லது செய்யறிவால் ஏற்படும் பேரிடர்களிலிருந்து தற்காத்துக் கொள்ள அணுசக்தித் துறைகளில் உள்ளதைப் போன்ற பல அடுக்குப் பாதுகாப்புகளை உருவாக்க வேண்டும் என்ற எச்சரிக்கை மணியுடன், ஓபன் ஏஐ மென்பொறியாளர் வெளியிட்ட ராஜிநாமா கடிதம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஒரு பக்கம் உலகமே செயற்கை நுண்ணறிவால் ஏற்படும் அபாயங்களை வெளிப்படுத்தி வரும் நிலையில், அண்மையில் அமெரிக்க அதிபரோ செயற்கை நுண்ணறிவுக்கு பதவி உயர்வு கொடுத்து சூப்பர் நுண்ணறிவு என்று கௌரவித்து மகிழ்ந்துள்ளார்.

ஏற்கனவே ஏஐ துறையின் மென்பொறியாளர்கள் சிலர், மிக முக்கிய எச்சரிக்கைகளை வெளியிட்டு தங்களது பதவியை ராஜிநாமா செய்திருக்கும் நிலையில், பேரிடர் காலம் அல்லது அணுசக்தித் துறைகளில் உள்ளதைப் போன்ற அபாய நேரத்தில் பயன்படுத்தப்படும் பல அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தொழில்நுட்பத் துறையும் பின்பற்ற வேண்டும் என்று கூறி, ஓபன் ஏஐ மென்பொறியாளர் தன்னுடைய பதவியை ராஜிநாமா செய்திருக்கிறார்.

அதாவது, செயற்கை நுண்ணறிவை அடுத்தக்கட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கு முன்பு, அதனால் ஏற்படும் அபாயத்தின்போது தற்காத்துக் கொள்ளும் பாதுகாப்பு முறைகளை உருவாக்க வேண்டும் என்று ஏற்கனவே ஒலித்து வரும் குரல்களுடன் இவரது குரலும் இணைந்துள்ளது.

தி அட்லாண்டிக் இதழில் டேவிட் ராபின்சன் வெளியிட்டிருக்கும் கட்டுரையில், செயற்கை நுண்ணறிவு குறித்து உலகம் முழுவதும் எழும் எச்சரிக்கைகளை குறிப்பிட்டுள்ளதோடு, ஏஐ ஏஜெண்டுகள் வேகமாக உருவாகி வருகின்றன, அவை மனிதர்களின் படைப்புகளையும் தாண்டி புத்திசாலித்தனமாக மாறிவிடுவதால், நினைத்துப் பார்க்க முடியாத அளவில், மிகக் கூடிய விரைவில் மனிதர்களின் கட்டுப்பாட்டிலிருந்து தப்பிக்கும் ஏஐ ஏஜெண்டுகள் மனிதகுலத்தின் அழிவுக்கு வித்திடும் என்கிறார்.

கடந்த ஒரு சில மாதங்களில் பல முறை செயற்கை நுண்ணறிவு மனிதர்களின் கட்டுப்பாடுகளை மீறி தன்னிச்சையாக செயல்பட்டு, தப்புவிக்கவும் முயன்றன. நல்வாய்ப்பாக அவை கட்டுப்படுத்தப்பட்டாலும், மீண்டும் அது தொடரும் என நம்ப முடியாது. மிக வேகமாக செயல்படும் செயற்கை நுண்ணறிவுத் திறன்களை உருவாக்கும் நிறுவனங்கள், அதனால் ஏற்படும் அபாயத்திலிருந்து தற்காத்துக் கொள்ள பாதுகாப்பு அமைப்புகளை ஏற்படுத்தவில்லை, உண்மையில் அதனை உருவாக்கும் நிறுவனங்கள் அதனால் ஏற்படும் அபாயங்களை உணர்ந்திருந்தும் உணராதது போலவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஓபன் ஏஐ–ல் அதிக நாள்கள் பணியாற்றிய மென்பொறியாளரான தான், அதன் அபாயங்களை நன்கு உணர்ந்திருப்பதாகவும், மனிதன் எதற்காக உருவாக்கினானோ அதற்கு நேர்மாறாக செய்யறிவுகள் திரும்பும் காலம் நெருங்கிவிட்டது என்கிறார். எனவே, அதிநவீன செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்கள், விமானப் போக்குவரத்து அல்லது அணுசக்தித் துறையைப் போல, கூடுதல் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் கவனமான திட்டமிடலுடன் செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கிறார்.

செயற்கை நுண்ணறி தற்போது மனிதர்களை ஏமாற்றக் கற்றுக்கொண்டுவிட்டது. விரைவில் அது மனித குலத்துக்கு அழிவை ஏற்படுத்தவும் கற்றுக் கொள்ளும். உண்மையல் அவை எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதுதான் இன்றைய கவலை என்கிறார். இதற்கிடையேதான், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், செய்யறிவை கட்டுப்படுத்த வேண்டும், அதன் வளர்ச்சியை மட்டுப்படுத்த வேண்டும் என்ற கூற்றை எதிர்ப்பதோடு, அது ஆபத்தானது என்ற விமர்சனமே ஒரு வதந்தி என்று வெளியிட்டிருக்கும் கருத்துகள் பேசுபொருளாகியிருக்கின்றன.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020